**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA 9337/F/2024**

திரு. க. துளசிலிங்கம் ... **மனுதாரர்**

**/ எதிர் /**

பொதுத் தகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கோவை) லிட், ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை சாலை,
ஈரோடு - 638 001. ... **பொது அதிகார அமைப்பு**

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.க.துளசிலிங்கம் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. அ.சாமிநாதன், பொதுத் தகவல் அலுவலர்/ தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், ஈரோடு மண்டலம், 45, சென்னிமலை சாலை, ஈரோடு - 638 001 ஆகியோர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 15.02.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தங்கள் அலுவலக பா.எண்.5711/பபி/கோ.கோ-2/99, நாள் 28.12.99 அலுவலக உத்தரவில் Pay Fixation தொடர்பான தகவல்களை 12 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால் மனுதாரர் 28.03.2023 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் உதவிப் பொதுத் தகவல் அலுலர் 17.10.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல்

வழங்கியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், 22.05.2023 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தன்னுடைய ஜூனியர் திரு.என்.சாலமன் மற்றும் திருமதி கே.எழிழரசி இருவரையும் விட குறைவாக வழங்கிய மொத்த சம்பளம் தொடர்பான தகவல்களை கோரியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். தான் பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலர் தான் கோரிய தகவல்கள் மூன்றாம் நபர் சம்பந்தப்பட்ட விபரங்கள் என்பதால் வழங்க வழி வகை இல்லை எனத் தெரிவித்து தகவல் வழங்க மறுத்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், உரிய காலத்திற்குள் தகவல் தராமல், தவறான தகவல்கள் வழங்கிய பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)இன் கீழ் உரிய தண்டனை வழங்கவும், தகவல் கிடைக்காமல் தனக்கு ஏற்பட்ட இழப்பீட்டை வழங்க சட்டப்பிரிவு 19(8)இன் படியும் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை ஏற்கனவே 13.10.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும் மனுதாரர் கோரிய தகவல்கள் மூன்றாம் நபர் சம்பந்தப்பட்ட விபரங்கள் என்பதால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 8(ஈ)இன் படி வழங்க வழிவகை இல்லை என ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான தகவல்களை ஒரு வார காலத்திற்குள் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9337/F/2023</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கோவை) லிட், ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை சாலை,
ஈரோடு - 638 001.

**<u>மனுதாரர் / மேல்முறையீட்டாளர்</u>**

திரு. க. துளசிலிங்கம்,
161-1, போஸ்ட் ஆபீஸ் அருகில்,
மகுடஞ்சாவடி - 637 103.
சங்ககிரி தாலுக்கா,
சேலம் மாவட்டம்.

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2024.